பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 05 | புதன்கிழமை | 22.11.2023 | அதிர்வு 113

## சபையில் மாவீரர்களை நினைவேந்திய எம்.பி.

**(சீ.ஏ.தமிழ்மாறன்)**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்த வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் மாவீரர்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 02

# யாழில் மாவீரர் நினைவாலயம் திறப்பு; தமிழ் உறவுகள் திரண்டு வந்து அஞ்சலி





**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் 06

### 45 மேலதிக வாக்குகளால்

# ரணிலின் ‘பட்ஜட்’ நிறைவேற்றம்!

### இரண்டாம் வாசிப்பு வாக்கெடுப்பில் மீண்டும் பலத்தைக் காட்டியது அரசு



- சீ.ஏ. தமிழ்மாறன் -

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.** 06

VIDEO

# சபையில் அலெக்ஸின் கொலைக்கு நீதி கோரிப் பேசிய தமிழ் எம்.பிக்கள்



**(சீ.ஏ.தமிழ்மாறன்)**

யாழ்ப்பாணம்-வட்டுக்கோட்டையில் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 26) என்ற இளைஞர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்துள்ளமை தொடர்பில் தமிழ் எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் கடும் கண்டனங்களை வெளியிட்டதுடன் உயிரிழந்த இளைஞரின் மரணத்துடன் தொடர்புபட்ட பொலிஸார் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 08

# கொக்குத்தொடுவாய் புதைகுழியில் மேலும் இரு எலும்புக்கூடுகள் மீட்பு!

### இலக்கத் தகடும், சயனைட் குப்பியும் கண்டெடுப்பு



**(சண்முகம் தவசீலன்)**

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து மேலும் இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இனம் 06




செய்திகளை வரைவதில் இயன்றவரை நேர்மைத் தன்மை பேணுவது நமது கடமையாக இருக்க வேண்டும். அதில், பல சந்தர்ப்பங்களிலும் நாம் தவறிழைக்கின்றோம் என்பதுதான் வேதனைக்குரியது.

செய்திவரைவது கத்திமீது நடப்பது போன்றது. அந்தப் பொறுப்பும் பொறுமையும் பல சமயங்களில் நம்மிடம் வெளிப்படுவதில்லை என்பதுதான் வேதனை தரும் 06

# இப்போது ராஜபக்ஷக்களை தொடருகின்றது கர்மவினை

## இப்படிக் கூறுகின்றார் சரத் பொன்சேகா

எனது மருமகனின் வியாபாரத்தை நான் அறிந்திருக்க வேண்டும் என்று எனக்கு எதிராக வாதாடிய முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரலுக்கு மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அவர்தான் இன்று ராஜபக்ஷர்களை பொருளாதார படு கொலையாளிகள் என்று அடையாளப்படுத்தியுள்ளார். இதுவே கர்மவினை என்பார்கள்.

கர்மவினை தொடரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:–

2024 ஆம் ஆண்டுக்கான வரவு –,செலவுத் திட்டத்தில் பல முன்மொழிவுகளை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். இந்த முன்மொழிவுகள் வெற்றிப்பெற்றால் மக்களுக்கு நன்மை பயக்கும்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி இவ்வாறான பல முன்மொழிவுகளை வழங்கினார். ஆனால் அந்த முன்மொழிவுகள் எவையும் செயற்படுத்தபடவில்லை.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல்களை இலக்காக கொண்டு வரவு – செலவுத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்படுகிறது.

தேர்தல் ஒன்று இடம்பெறுமாக இருந்தால் இவ்வாறான வாக்குறுதிகளை முன்வைக்கலாம். தேர்தலும் எப்போது இடம்பெறும் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பினால் சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு



எதிரான வன்முறைகள் தீவிரடைந்துள்ளன.

பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கி, தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

பொருளாதாரப் படுகொலையாளிகளை நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது. இந்தக் குற்றத்தைத் தேசத் துரோக செயற்பாடாகக் கருத வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நான் இரண்டரை வருடங்கள் சிறையில் இருந்தேன்.

அப்போது எனக்கு எதிராக நீதிமன்றத்தில் முன்னிலையான அப்போதைய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் “எனது மருமகனின் வியாபாரம் தொடர்பில் நான் அறிந்திருக்க வேண்டும் “ என்று குறிப்பிட்டார்.

அவருக்கு அக்காலப்பகுதியில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர் தான் தற்போது ராஜபக்ஷர்களை பொருளாதார படுகொலையாளிகள் என்று அடையாளப்படுத்தியுள்ளார். இதனையே கர்மவினை என்பார்கள். ராஜபக்ஷர்களை கர்மவினை தொடரும். எதிர்காலத்திலும் பல சம்பவங்கள் நிகழும். – என்றார்.

# வவுனியாவில் ஏழு கடைகளில் தொடர் திருட்டு; டி.ஐ.ஜி. காரியாலத்திற்கு முன்பாகத் துணிகரம்





வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் (டி.ஐ.ஜி.) காரியாலயம் முன்பாகவுள்ள 7 வியாபார நிலையங்களில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம்இரவுஇந்தத்தொடர் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா, கண்டி வீதியில் வன்னிப் பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலத்திற்கு முன்பாக உள்ள வியாபார நிலையங்களின் கதவுகளை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வியாபார நிலைய உரிமையாளர்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து சிசீடீவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

7 கடைகளில் இடம்பெற்ற இத் திருட்டில் 50ஆயிரம் ரூபாய் வரையிலான பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

## சபையில் மாவீரர்களை…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுச்செயலாளரும் எம்.பியுமான செல்வராசா கஜேந்திரன் நினைவு கூர்ந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 7ஆம் நாள் இறுதி விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு நினைவு கூர்ந்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் புனிதமான மாதம் நவம்பர். அந்தவகையில் இன்று (நேற்று) 21 ஆம் திகதி மாவீரர் வாரம் தமிழர் தேசமெங்கும் உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியுள்ளது. தமிழ்த் தேசத்துக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் தம்மை ஆகுதியாக்கிய மாவீரர்களுக்கு இந்தச் சபையில் அகவணக்கம் செலுத்துகின்றேன்.” – என்றார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
VAN FOR RENT
A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

# இலங்கைக் கிரிக்கெட் அணி தொடர்ந்தும் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கலாம்!

## ஐ.சி.சி. அறிவிப்பு




இலங்கை அணி தொடர்ந்தும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க முடியும் என ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச கிரிக் கெட் பேரவை அறிவித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிர்வாகக்குழு கூட்டம் நேற்று அஹமதாபாத்தில் நடைபெற்ற போதே இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு கடந்த 10 ஆம் திகதி சர்வதேச கிரிக் கெட் பேரவையின் நிர்வாக சபை எடுத்த தீர்மானத்தை உறுதிப் படுத்தியதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் கோரிக்கையை செவிமடுத்ததன் பின்னர் இருதரப்பு கிரிக் கெட் தொடர் மற்றும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் போட்டிகளில் இலங்கை அணியால் பங்கேற்க முடியும் என நேற்று தீர்மானிக்கப்பட்டதாக அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சர்வதேச கிரிக்கெட் பேரவையால் இலங் கைக்கு வழங்கப்படும் பிரதான கொடுப்பனவு கட்டுப்படுத் தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிர்வாகக்குழுக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் நிறு வன தலைவர் ஷம்மி சில்வாவும் கலந்துகொண்டிருந் தார்.



# RUHBINS HOSPITAL (PVT) LTD.

NO. 160, POINT PEDRO ROAD, NELLIYADY, JAFFNA.

## NOVEMBER 14

# WORLD DIABETES DAY

## DIABETES IS A SILENT KILLER

Approximately
463 M +
From the
World Population

Over
2 M
Sri Lankans are
Diabetes

Every
6 seconds
One person dies
due to Diabetes



## Access to Diabetes Care

### WELLNESS PACKAGE

- HBA1C
- Fasing/ Random Blood Sugar
- Total Cholesterol
- Creatinine & eGFR
- Blood Pressure
- BMI Assessment
- Consultation with Medical Officer
- Advice on Lifestyle Modification

**Special Offer**

**Rs. 5,500/-**

Offer valid till Dec 14th

Hotline:
+94772486642

உங்கள் அன்பிற்குரியவரை நீரிழிவு பரிசோதனை செய்துகொள்ள சொல்லுங்கள், அது அவர்களின் உயிரை பாதுகாக்கும்.

Ruhbins Hospital

No. 160, Pointpedro Road, Nelliyadi, Jaffna

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்மை.

அண்மைக்காலத்தில் அதிகம் பேசப்பட்ட இரண்டு விடயங்களை மட்டும் இன்று குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு, தாக்குதலுக்கு இலக்கானவர் என்று கூறப்படும் இளைஞர் ஆஸ்பத்திரியில் மரணமான விடயம் இப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அவர் தாக்கப்பட்டமை, நுரையீரல் பாதிக்கப்பட்டமை அல்லது சிறுநீரகம் சேதம் அடைந்தமை எல்லாம் உண்மையாக இருக்கலாம். ஆனால் அவை எல்லாம் பேச்சில் வெறுமனே கூறப்பட்ட விடயங்களே தவிர, நீதிமன்ற ஆவணங்களில் இன்னும் வந்தவை அல்ல.

இந்த மரணம் தொடர்பான உடற்கூற்று ஆய்வு அறிக்கையில் சட்ட மருத்துவர், ஆக, பின்வரும் விடயங்களை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார்.

+ இந்த விவகாரம் ஆய்வில் உள்ளது.

+ கை, கால்களிலும், முதுகிலும் முற்பக்கத்திலும் கண்டல் மற்றும் சிராய்ப்புக் காயங்கள் உள்ளன.

+ நேரடியாகவோ, மறைமுகமாகவோ இயற்கை மரணம் அல்ல இது என்பது தெளிவானது.

+ ஆய்வுக்காக உடல் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன.

– இவ்வளவுதான் உடற்கூற்று ஆய்வு மருத்துவரின் அறிக்கையில் இப்போது சொல்லப்பட்ட விடயங்கள்.

ஆனால் நுரையீரல் தாக்கப்பட்டதால் மரணம், சிறுநீரகம் பாதிக்கப்பட்டதால் மரணம் என்றெல்லாம் நமது ஊடகங்கள் பலவும் நீட்டி முழக்கி விட்டன. அவற்றை அடையாளம் கண்ட மருத்துவர்கள் யார் என்று தெரியவில்லை.

இந்தச் செய்திகளை அவதானித்து நீதிமன்றம் தம்மை விளக்கம் கேட்டு மன்றுக்கு அழைக்காது என்ற நம்பிக்கையில்தான் இப்படி நம்மவர்கள் கை, கால்கள் வைத்து எழுதுகிறார்கள் போலும்.

அடுத்த விடயம், 2019 – 2022 காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு ராஜபக்ஷ குழுவினரே பொறுப்பு என்று உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியதாகக் கடந்த வாரத்தில் நாங்கள் எல்லோரும் வெளியிட்ட செய்தி.

இந்த வழக்கில் இரண்டு விதமான தீர்ப்புகள் வழங்கப்பட்டன. எதிர்மனுதாரர்களான ராஜபக்ஷக்கள் உட்பட்ட தரப்பினருக்கு எதிராக நான்கு நீதியரசர் வழங்கிய 119 பக்கத் தீர்ப்பு. அதற்கு மாறாக ஒரு நீதியரசர் வழங்கிய 127 பக்கத் தீர்ப்பு. இரண்டு தீர்ப்புகளையும் எந்த ஊடகவியலாளரும் முழுமையாக வாசித்திருக்க மாட்டார்கள்.

மாறாக, எடுத்த எடுப்பில் – இருந்த கோபத்தில் – ராஜபக்ஷக்கள் குழாமை ஒரு காட்டுக் காட்டி விட்டோம். ராஜபக்ஷகளுக்கு எதிரான இத்தீர்ப்பில் நான்கு நீதியரசர்கள் மூன்று விடயங்கள் குறித்து அதிகம் கவனம் செலுத்தி இருக்கின்றனர்.

ஒன்று – 2019 இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய வரிவிலக்கு.

அடுத்தது – ரூபாயின் பெறுமதியை சரியான தருணத்தில் மிதக்க அனுமதிக்காமல் அதை சேர்க்கையாக இழுத்துப் பிடித்து வைத்திருந்தமை.

மூன்றாவது – சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடும் தீர்மானத்தை எடுக்கத் தாமதித்தமை.

இந்த மூன்று விடயங்களுக்காகவும் ராஜபக்ஷக்கள் மற்றும் அவரது பணிக் குழாம் அணியை நீதியரசர்கள் குறை கூறினர்.

எனினும் நாட்டின் பொருளாதார நிலை ஏதோ 2019 – 2022 இல் தான் வீழ்த்தப்பட்டது என்று அவர்கள் கூற வில்லை.

ஏற்கனவே நாட்டின் பொருளாதாரம் மோசமான கட்டத்தில் இருந்தமையை நீதியரசர்கள் ஏற்றுக் கொண்டு அதைத் தங்கள் தீர்ப்பில் கோடி காட்டி இருக்கிறார்கள்.

அதன் பின்னர் 2019 – 2022 கால கட்டத்தில் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சி அடைந்தமைக்கு மேற்படி ராஜபக்ஷக்களும் அவர்களது குழுவினருமே பொறுப்பு (Responsible) என்றும் நீதிமன்றம் கூறவே இல்லை.

“இவர்களின்( ராஜபக்ஷக்களின்) செயல்கள், அவர்கள் செய்யாமல் விட்டமை, அவர்களின் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவை பொருளாதார நெருக்கடி ஏற்படுத்துவதற்கு பங்களித்தன (contributed) என அடையாளம் காணப்பட்டது” – என்றே நீதியரசர்கள் தமது தீர்ப்பில் கூறியுள்ளனர். அதனால் தான் அவர்களுக்குத் தண்டனைத் தீர்ப்பு எதையும் உயர்நீதிமன்றம் வழங்க வில்லை.

இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷக்களும் அவர்களது அணியினருமே முழுப் பொறுப்பு என்று நீதிமன்றம் அடையாளம் கண்டு அம்பலப்படுத்தி விட்டது என்று சிங்கள,தமிழ், ஆங்கில ஊடகங்கள் யாவும் செய்தி வெளியிட்டனர்.

இந்த அறிக்கையிடல் இப்போது சுயாதீன தரப்புகளினால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளது. அரசியல்வாதிகள் கூட தம்பாட்டுக்கு அப்படி நீதிமன்றம் தீர்ப்பளித்ததாகவே விமர்சனங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

தவறான அறிக்கையிடலால் சேதம் விளைவித்தாகிவிட்டது. அதைத் திருத்த இனி இடமில்லை. தென்னிலங்கைச் செய்தியாளர்கள் சிலருடன் இப்படி அறிக்கையிடப்பட்டமை குறித்து விவாதித்தேன். அவர்களில் பலருக்கு அதுபற்றி கவலையில்லை. இது அவர்களுக்கு (ராஜபக்ஷக்களுக்கு) வேண்டும் என்பதுதான் அவர்களின் கருத்தாக இருந்தது.

எது,எப்படிஎன்றாலும்,இப்படிஅறிக்கையிடல் ஊடக தர்மமன்று என்பது மட்டும் உண்மை.

## கொக்குத்தொடுவாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணியின் இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் நாள் அகழ்வு நேற்று இடம் பெற்றபோதே இந்த இரு எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அந்த மனித எலும்புக்கூடுகளின் உடற்பகுதிகளில் இருந்து துப்பாக்கிச் சன்னங்களும், குண்டுச் சிதறல்களும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலக்கத் தகடு ஒன்றும், சயனைட் குப்பி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இலக்கத் தகட்டில் இ – 0043 என்ற அடையாளம் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராட்டத்தில் தமது இன்னுயிரைத் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இதையொட்டி யாழ்ப்பாணம் – நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நேற்று மாலை 6 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தாயாரான சிவபாதம் இந்திரவதி ஏற்றிவைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ச்சியாக சிறுவர், சிறுமியர்களால் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்லறை திரை நீக்கம் செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி தொடக்கம் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தாயக மண்ணின் விடியலுக்காக வித்தாகியவர்களில் கிடைக்கப் பெற முடிந்த 24 ஆயிரத்து 379 மாவீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய கல்லறைகளையும், சில தகவல்களையும் உள்ளடக்கி நினைவாலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், முன்னாள் போராளிகள், சிறுவர்கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மாவீரர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கு அஞ்சலி செலுத்தினர்.

## ரணிலின் ‘பட்ஜட்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் கிடைத்த நிலையில் 45 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் 25 பேர் பங்கேற்க வில்லை.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைக் கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார். அதையடுத்து வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் நேற்று 21 ஆம் திகதி வரை நடைபெற்ற நிலையில் அதன் மீதான வாக்கெடுப்பே நேற்று மாலை 6 மணிக்கு இடம்பெற்றது.

விவாத முடிவில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரினார். இதையடுத்து நடைபெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டது.

வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து எதிர்க்கட்சிப் பக்கத்திலுள்ள நிமல் லான்சா, துமிந்த திஸாநாயக்க, ஏ.எல்.எம். அதாவுல்லா, வடிவேல் சுரேஷ், அலி சப்ரி ரஹீம், ஜோன் செனவிரத்ன, அனுர பிரிய தர்ஷன யாப்பா, பிரியங்கா ஜயரத்ன ஆகியோர் வாக்களித்தனர்.

எதிராக எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே .வி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் வாக்களித்த நிலையில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. (தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி) வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை, சமல் ராஜபக்ஷ, இரா. சம்பந்தன், விமல் வீரவன்ஸ, ரிஷாத் பதியுதீன், அத்துரலிய ரதன தேரர், குமார வெல்கம உள்ளிட்ட 25 எம்.பி.க்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

2024ஆம்ஆண்டுக்கானவரவு–செலவுத் திட்டத்தின் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் டிசம்பர் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலுக்கு 2 சுற்றுகளில் வெற்றி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய அரசியல் சூதாட்டத்தில் இரண்டு முக்கிய விடயங்களை அவர் இந்த சமயத்தில் வெற்றிகரமாக தாண்டி இருக்கின்றார்.

முதலாவது - நிதி அமைச்சர் என்ற முறையில் தான் சமர்ப்பித்த அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பில் மிக சாதகமாக அவர் வெற்றி பெற்றிருக்கின்றார்.

அவரது அரசுக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் அவரது அரசு 45 மேலதிக வாக்குகளுடன் ஸ்திரமான வெற்றி ஒன்றை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

ரணிலின் அரசு மொட்டுக் கட்சியினரின் வலுவான ஆதரவுடன் உறுதியாக உள்ளது என்பதைத்தான் இந்த வாக்கெடுப்பு முடிவுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாக்கல் செய்த வரவு - செலவு திட்டத்தைத் தமது மொட்டுக்கட்சியினுடையது போல அக்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ புகழாரம் சூட்டி வரவேற்கின்ற நிலைமையை ஜனாதிபதி ரணிலினால் பேண முடிந்திருக்கின்றமை என்பது அவருக்கு கிடைத்த நல்ல அரசியல் ஆதாயம் - குறிப்பிடத்தக்க வெற்றி - என்றால் அதுவும் மறுக்கக் கூடியது அல்ல.

அடுத்த ஆண்டு ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதுவரை மொட்டுக் கட்சியின் ஆதரவில் தமது அரசை ரணில் வெற்றிகரமாகக் கொண்டிழுப்பார் என்பதை நேற்றைய நாடாளுமன்ற வாக்கெடுப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாக தாண்டிய அடுத்த விடயம், நாட்டின் கடன்மீளளிப்புத்தொடர்பாகமறுசீரமைக்கப் பட்டஇணக்கத்திட்டம்ஒன்றுக்குசீனஎக்ஸிம் வங்கியைச் சம்மதிக்க வைத்தமையாகும்.

“சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் (எக்ஸிம் வங்கிக்கும்) இலங்கைக்கும் இடையில் கடன் மறுசீரமைப்பு சம்பந்தமாக எட்டப்பட்ட கொள்கை அடிப்படையிலான ஒப்பந்தத்தின் ஆவணம் எமக்குக் கிடைத்துள்ளது. இது இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் ஒரு சாதகமான படியாகும்” - என்று சர்வதேச நாணய நிதியத்தின் பணிக்குழுத் தலைவர் பீட்டர் புரூவர் தெரிவித்திருக்கின்றார்.

“அனைத்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களிடமிருந்தும் நிதி உதவி உறுதிமொழி கிடைத்தவுடன், சர்வதேச நாணய நிதியம் இலங்கை தொடர்பான முதல் திட்ட மதிப்பாய்வுடன் விடயங்களை முன்நகர்த்தும்” - என்று பீட்டர் புரூவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

அதாவது, சர்வதேச நாணய நிதியம் தனது உதவி திட்ட நடவடிக்கைகளை இனிமேல் இலங்கை விடயத்தில் முன்னோக்கி நகர்த்தும், தாமதப்படுத்துவதற்குரிய காலம் முடிந்து விட்டது என்பதுதான் இதன் அர்த்தம்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவத் திட்டமிட்டுள்ள விடயங்களின் பிரகாரம் உதவிகள், கடன்கள் இனி தாராளமாக, தடையின்றி, திட்டமிடப்பட்ட ஒழுங்குகளின் படி, இலங்கைக்குக் கிட்டத் தொடங்கும்.

இந்த வெற்றிகளைத்தான் ரணில் எதிர்பார்த்திருந்தார். அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று சுமார் ஒன்றரை வருடத்துக்குள் அவருக்குக் கிடைத்த கணிசமான வெற்றியாகும் இவை இரண்டும்.

# இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் தொழில் ஒப்பந்தத்திற்கு அமைச்சரவையில் அனுமதி

இலங்கை பணியாளர்களை தொழிலுக்கு அமர்த்துதல் குறித்த இஸ்ரேல் அரசாங்கத்துடனான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இஸ்ரேலில் திட்டவட்டமான தொழிற் சந்தை துறைகளில் தற்காலிக தொழில்களில் இலங்கையர்களை ஈடுபடுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய, இஸ்ரேலில் விவசாய நடவடிக்கைகளுக்காக தொழிலாளர்களை ஆள்சேர்ப்பில் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2023

“பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!”
- கவிஞர் புதுவை இரத்தினதுரை



# வடக்கு ஆளுநரைச் சந்தித்தார் நோர்வேயின் எரிக் சொல்ஹெய்ம்





வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்க்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வட மாகாணத்தின் இடர்முகாமைத்துவம், மக்களின் அன்றாட வாழ்வியல் நிலை, காலநிலை, பொருளாதாரம், மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரால் இதன்போது சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மிற்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

விடயங்களை கேட்டறிந்துக்கொண்ட எரிக் சொல்ஹெய்ம், இலங்கை விஜயத்தின் போது, வடக்கு மாகாண ஆளுநரை முதலில் சந்திக்க கிடைத்தமையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறார் எனக் கூறினார்.

இலங்கையின் வளர்ச்சிக்கான பசுமை திட்டங்களை முன்னெடுப்பதில் தாம் மகிழ்ச்சியடைகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

சூரிய, காற்றாலை, நீர் மின் உற்பத்திக்கான வளங்களை இலங்கை கொண்டுள்ளமையால், பச்சை ஹைட்ரஜன் (green hydrogen) திட்டத்தை மேற்கொள்ள முடியும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு தேவையான பூரண ஒத்துழைப்பை வழங்குவார் எனவும், ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம், ஆளுநரிடம் உறுதியளித்தார்.

# ரணிலின் பட்ஜெட் மஹிந்தர் புகழாரம்



2024ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் எதிர்காலத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்தார்.

நாடா ளுமன்றத்தில் இடம்பெறும் 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

“அடுத்தாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் முற்றிலும் எதிர்காலத்துக்கான வரவு – செலவுத் திட்டமாகும். கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தை மையப்படுத்தியே இந்த வரவு – செலவுத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், இதில் நிதி முகாமைத்துவம் அல்லது நிதி ஒழுக்கம் பேணப்பட்டுள்ளது.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள நிதிக் கொள்கையை அடுத்த சில ஆண்டுகளுக்கு இறுக்கமாக பேணுவது அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது.

சிறப்பானதொரு வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சூழலில் சிலர் மக்களை குழப்பும் விதத்தில் போலியான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதனால் மக்களுக்கு கிடைக்கும் நன்மை என்ன?

சர்வதேச நாணய நிதியத்துடன், இணைந்து பணியாற்றுவதால் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் சம்பள அதிகரிப்பு, ஓய்வூதியம், முதியோர் கொடுப்பனவு தொடர்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பை வரவேற்கிறோம். மிகவும் பயனுடைய பல விடயங்கள் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளன.“ என்றும் அவர் கூறியுள்ளார்.

## சபையில் அலெக்ஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டம் வாசிப்பு மீதான 7 ஆம் நாள் இறுதி விவாதத்தில் உரையாற்றிய ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பியும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கூறுகையில்,

“யாழ்ப்பாணம் – வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த நிலையில் கடுமையாகத் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான நிலை பிற தரப்பினருக்கு ஏற்பட்டிருந்தால் இன்று அனைத்தும் முறையாக இடம்பெற்றிருக்கும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் திங்கட்கிழமை (நேற்றுமுன்தினம்) இரவு வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தொலைபேசியில் உரையாடினேன். இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பில் இருந்து விசேட குழுவை அழைத்து விசாரணை செய்வதாகக் குறிப்பிட்டார். ஆனால், அங்குள்ள பொலிஸ் தரப்பினர் ஊடாகவே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்த இந்த இளைஞர் மீது நான்கு நாள்களாகக் கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தமரணம் இயற்கையானது அல்ல என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொலிஸ் பாதுகாப்பிலான மரணங்கள் ஒன்றும் புதிதல்ல. இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த காலங்களில் பல இளைஞர்கள் பொலிஸ் தடுப்பில் இருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்கள். அவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. ஆகவே, இந்தச் சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட எம்.பி. சித்தார்த்தன் கூறுகையில்,

“பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்னும் இளைஞர் கடந்த 12ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பின்னர் மீண்டும் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் மீண்டும் 19 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். இவரின் மரணம் தொடர்பில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையில் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டதால் மரணம் நிகழ்ந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. எனவே, இந்த இளைஞரின் மரணம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சர் உரிய விசாரணைகளை நடத்த வேண்டும். ஜனாதிபதியும் இதில் தலையிட வேண்டும்.” – என்றார்.

# யாழ். நல்லூரில் மாவீரர் நினைவாலயம் திறப்பு

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)













# மனிதப் புதைகுழி எத்தனை தூரம் வியாபித்துள்ளது? ஸ்கான் இயந்திரம் மூலம் வெள்ளியன்று சோதனை



(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது என்பதை அறிய எதிர்வரும் 24ஆம் திகதி விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனையிடப்படவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட விசேட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

நேற்றுநடைபெற்றஅகழ்வுப்பணியின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து இன்று (நேற்று) இரு மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அந்த எலும்புக் கூடுகளின் உடற்பகுதியில் இருந்து துப்பாக்கிச் சன்னங்கள், குண்டுச் சிதறல்கள், விடுதலைப்புலிகளின் இலக்கத் தகடு மற்றும் சயனைட் குப்பி ஆகியன கண்டெடுக்கப்பட் டன.

தொடர்ந்து இப்பணி முன்னெடுக்கப்படும். எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட ஸ்கான் இயந்திரம் மூலம் சோதனை இடம்பெறும். அதன்போது இந்த மனிதப் புதைகுழி எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது, எத்தனை படைகளில் எலும்புக்கூடுகள் அடுக்கப்பட்டிருக்கின்றன எனும் தகவல்களை அறியமுடியும்.

களனிப் பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினரே குறித்த ஸ்கான இயந்திரத்தைக் கொண்டு வருகின்றனர்.” - என்றார்.

# வெளிநாடுகளுக்கு ஆள்களை அனுப்புவதாகக் கூறி பண மோசடி செய்யும் சம்பவங்கள் யாழில் அதிகரிப்பு

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடியில் ஈடுபடும் சம்பவம் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருகின்றன என யாழ். பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.

ஜெர்மன், சுவிட்ஸர்லாந்து, கனடா ஆகிய நாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பண மோசடி இடம்பெறுவதாக யாழ். பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த குறிப்பிட்டார்.

கடந்த மூன்று மாதங்களில் யாழ். மாவட்டத்தில் இருந்து 20 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஒருவரிடமிருந்து 20 லட்சம் ரூபாவில் இருந்து 90 லட்சம் ரூபா வரை பண மோசடி இடம்பெற்றுள்ளதாக யாழ். பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.



சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் பதிவுகளைப் பார்த்து, பணம் செலுத்தியவர்களே இதில் அதிகம் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பண மோசடிகள் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரயில் என்ஜின்களுக்கு பற்றாக்குறை: சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலை



ரயில் என்ஜின்களின் பற்றாக்குறை காரணமாக உரிய நேரத்தில் ரயில்களை சேவையில் ஈடுபடுத்த முடியாதுள்ளது என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், நாளாந்தம் ரயில் பயணங்கள் சிலவற்றை இரத்துச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுவதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜெ. இதிபொலகே தெரிவித்துள்ளார்.

உதிரிப்பாகங்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினால் ரயில் என்ஜின்களை திருத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

வழமையான ரயில் போக்குவரத்திற்கு 70 ரயில் என்ஜின்களும் 50 டீசல் - இலத்திரனியல் இயந்திரத் தொகுதிகளும் தேவைப்படுவதாக ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

# கீரி சம்பா இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி!




கீரி சம்பா அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கீரி சம்பா அரிசி பற்றாக்குறைக்கான தீர்வாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கீரி சம்பா அரிசியை விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச சில்லறை விலை 260 ரூபாவாகும்.

இதனிடையே, தனியார் துறையினர் வசம் காணப்படும் சீனித் தொகையை அரசாங்கத்தின் ஊடாக, சதொச பல்பொருள் அங்காடிகளின் மூலம் விற்பனை செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# டெங்கு நோய் பரவல் சடுதியாக அதிகரிப்பு




மழையுடனான வானிலையின் காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை டெங்கு அபாயம் அதிகம் காணப்படும் 45 வலயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்தியர் நளின் ஆரியரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 73 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



# உத்தேச மின்சக்தி துறை மறுசீரமைப்பு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி

உத்தேச மின்சக்தி துறைக்கான மறுசீரமைப்பு சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது சமூக வலைத்தளத்தில் இதனை பதிவிட்டுள்ளார்.



புதிய சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு, நிறைவேற்றிக் கொள்வதற்காக நாடாளுமன்றத்தில் அது சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னர் இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்படவுள்ளது.

அத்துடன், மின்னுற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம் ஆகியன தனியார் துறையின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளன.

# ஒலி, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தை கொண்டு வர அமைச்சரவை அனுமதி

இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஒலி, ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தை அறிமுகப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை உயரிய வகையில் பாதுகாத்து, சிறந்த ஊடகத்துறையை உறுதிப்படுத்தும் நோக்கில், இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஒலி, ஒளிப்பரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்க வெகுசன ஊடக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை கடந்த செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தை தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய கொள்கை ரீதியான விடயங்கள் பற்றி பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் தலைமையில் அமைச்சரவை உப குழுவொன்று உருவாக்கப்பட்டது.

இந்த குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள ஒலி, ஒளிபரப்பு ஆணைக்குழு சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்வதற்காக பொருத்தமான ஏற்பாடுகளுடன் கூடிய அடிப்படை சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப வரைவின் அடிப்படையில், சட்டமூலத்தை தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.






# ஈ.பி.டி.பி. பேச்சாளர் குஷ்புவுக்கு வக்காலத்து சம்பந்தனும் புலிகளை விமர்சித்தவர் என்கிறார்

(எஸ்.நிதர்ஷன்)

புலிகள் இயக்கத்தினரை திரைப்பட நடிகை குஷ்பு மட்டும் பயங்கரவாதிகள் என்று கூறவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றே முத்திரை குத்தினர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக இருந்த இசை நிகழ்வு ஒன்றைத் தொகுத்து வழங்குவதற்காக தென்னிந்தியத் திரைப்பட நடிகை குஷ்பு அந்த நிகழ்வை நடத்தும் நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் புலிகள் இயக்கத்தினரைப் பயங்கரவாதிகள் என்று ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வி ஒன்றில் குறிப்பிட்டார் எனவும் அதனை முன்னிலைப்படுத்தி தொகுப்பாளரான குஷ்புவை இலங்கைக்கு வர அனுமதிக்க மாட்டோம் என சில நபர்கள் சமூக வலைத்தளங்களில் செய்திகளை பரவவிட்டனர் எனவும் அதனால் அந்த நிறுவனம் நடிகை குஷ்புவை மாற்றியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

உண்மையில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி நாடாளுமன்ற உரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம், மனித உரிமைகளை மதிக்காத காரணத்தால் அழிந்து போயினர் எனவும் கூறி புலிகளை அழித்த அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நன்றி தெரிவித்திருந்தார்.

மேலும் புலிகளை அழித்தமையால் நான் இன்று திருமலைக்கு சென்று கோணேஸ்வரப் பெருமானை சுதந்திரமாக தரிசிக்க முடிவதாகவும், அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு செயலாளர் கோட்டபய ராஜபக்ஷவுமே காரணம் என புகழாரமும் சூட்டியிருந்தார்.

இவ்வாறு புலிகளை பயங்கரவாதிகள் என்றும், பாசிசவாதிகள் என்றும், மனித குலத்துக்கே கொடூரமானவர்கள் என்றும், கூட்டமைப்பின் தலைவராக தன்னொ புலிகள் நியமிக்கவில்லை என்றும் கடும் விமர்சனங்களை முன்வைத்த இரா சம்பந்தனை திருமலை மாவட்ட மக்கள் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்திருக்கின்றனர்.

அவ்வாறாயின் புலிகள் பயங்கரவாதிகள் என்ற சம்பந்தனின் கருத்தை திருகோணமலை மாவட்ட மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்று அர்த்தப்படுமா?

அதேபோல பிரபாகரன் வன்வலுவால் சாதிக்கமுடியாததை சட்டத்தரணி சுமந்திரன் மென்வலுவால் சாதிக்கின்றார் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் புளகாங்கிதம் அடைந்து வந்தனர். இதேவேளை மற்றுமொரு சட்டத்தரணியான சுவஸ்திகா புலிகள் இயக்கம் ஒரு பாசிசவாதிகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே கருத்தச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் ஒரு ஜனநாயகத்தில் வலுப்பெறவேண்டும் என்பதே எமது கருத்தாக உள்ளது.

திரைப்பட நடிகை குஷ்புவின் வருகையைத் தடுப்பவர்கள் அல்லது சமூக வலைத் தளங்களில் விமர்சிப்பவர்கள் சம்பந்தனின் கருத்துக்கு என் பரிகாரம் கண்டார்கள்?

இதேவேளை புலிகளுக்கு மருந்துப் பொருள்களை அனுப்புவதற்கான மருந்து வகைகளின் பட்டியலை வைத்திருந்த குற்றச்சாட்டில் மறவன்புலவு சச்சிதானந்தம் இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த சமயம் தமிழக அரசியல் முக்கியஸ்தர் பழ.கருப்பையா அவரை சந்தித்து நலன்விசாரித்தார். அப்போது மறவன்புலவு சச்சிதானந்தம் தான் கைது செய்யப்பட்ட விடயத்தை தெரிவித்தபோது பழ கருப்பையா அதை அறிக்கையாக வெளியிட்டிருந்தார்.

அப்போது கருணாநிதி முதலமைச்சர். அவர் மறவன்புலவு சச்சியானந்தத்தின் நண்பராக இருந்தாலும் புலிகள் விடயத்தில் அவரை சிறையிலிட்டார்.

அதை அறிந்த திரைப்பட இயககுநர் புகழேந்தி அந்தச் சம்பவத்தைத் தளமாகக் கொண்டு காற்றுக்கென்ன வேலி என்னும் திரைப்படத்தை இயக்கி வெளியிட்டிருந்தார்.

அந்தப்படத்தை தணிக்கைக்குழு தடுத்து திருத்தம் செய்து மீண்டும் வெளியிட முயன்றும் தமிழக அரசு தடை செய்தது. புலிகளுக்கு சார்பானது என்பதால் இவ்வாறான நெருக்கடிகளை தமிழக அரசு கொண்டுவந்தது.

இதைவிட அப்படம் புலிகளுக்கு சார்பானது என தெரிந்ததால் பல நடிகைகள் நடிப்பதற்கு மறுப்பு தெரிவித்திருந்த நிலையில் அப்படத்தில் குஷ்புவே கதாநாயகியாக நடிக்க ஒப்புக்கொண்டார். இதேவேளை அந்தப் படம் அன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் குறிப்பாக வன்னிப்பகுதியில் மிகவும் வெற்றிகரமாக திரையிடப்பட்டது

எதையும் எதிர்ப்பதற்காகவே எதிர்க்கவே வேண்டும் என எதிர்ப்பதில் ஒரு துன்பியல் சுகங்காண்பவர்கள் நடிகைகள் நடித்த படத்தை பார்காமல் விட்டார்களா?

இப்போதுள்ள சூழ்நிலையில் மக்களிடையே குஷ்பு வர அனுமதிப்பதா,தடுப்பதா என வாக்குகெடுப்பு நடத்தினால் தடுப்பவர்கள் தாமாகவே தலைமறைவாகி விடுவார்கள்.– எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிபபிடத்தக்கது.

# மாவீரர்களின் பெற்றோர் நேற்று முள்ளியவளையில் கௌரவிப்பு




(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 11.30 மணியளவில் தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் ஞனதாஸ் யூட்சன் தலைமையில் இடம்பெற்றது.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டனர். முதல் நிகழ்வாக உயிர்த் தியாகம் செய்த இரண்டு மாவீரர்களின் பெற்றோரான மரியகொலஸ்ரி, செந்தாமரை அம்மா ஆகியோரினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் மாவீரர்கள் இந்த மண்ணிற்கு ஆற்றிய உயிர்த்தியாகம் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களான க.விஜிந்தன், க.தவராசா, பிரதேச சபையின் உறுப்பினர் த.அமலன், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# கொல்லப்பட்ட சித்தன்கேணி இளைஞனின் சாவுக்கு நீதி கோரி சிறிதரன் எம்.பி. கடிதம்!

## பொலிஸ் மா அதிபருக்கு நேற்று அனுப்பினார்

வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடந்த 2023.11.08 ஆம் திகதி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, கலைவாணி வீதி, சித்தன்கேணி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு.நாகராசா அலெக்ஸ் என்னும் 26 வயது இளைஞன் பொலிஸாரின் அராஜகமான தாக்குதலால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் 2023.11.19 ஆம் திகதி உயிரிழந்துள்ளமை தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைப் பொலிஸ் மா அதிபருக்கு நேற்றையதினம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பொலிஸாரின் கைது நடவடிக்கையில் தொடங்கி, மரணம் நிகழ்ந்தது வரையான சம்பவங்களை வரிசைப்படுத்தி, இளைஞனின் சாவுக்கு நீதியை வலியுறுத்திக்கோரும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பப் பின்னணியைச் சேர்ந்த அப்பாவி இளைஞனான அலெக்ஸ், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த போதே வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும், சித்திரவதைகளாலும் உயிரிழந்துள்ளார். எனினும் இதுதொடர்பிலான விசாரணைப் பொறிமுறைகள் எவையும் இதுவரை முறையாகக் கைக்கொள்ளப்படாத நிலையில், விசாரணையின் தீவிரத்தன்மையையும், இறந்துபோன இளைஞனின் உறவுகளது கோபத்தையும் நீர்த்துப் போகச்செய்யும் வகையில், தாக்குதல் மேற்கொண்ட இரு பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை அநியாயமாகக் கொல்லப்பட்ட ஓர் அப்பாவி உயிரின் பெறுமதியை மலினப்படுத்துவதோடு, பொலிஸ் அதிகாரத்தனத்தின் வெளிப்பாட்டை மிகக் கோரமானதாகவும் பதிவுசெய்திருக்கிறது.

எனவே இதுவிடயத்தில் தாங்கள் உயரிய கரிசனைகொண்டு, பொலிஸார் மீதான குற்றங்களை மறைத்து விசாரணையை மடைமாற்றும் வழக்கமானதும் நீதிக்குப்புறம்பானதுமான செயற்பாடுகளைத் தவிர்த்து, இறந்துபோன இளைஞனின் உயிரை எந்தப் பிரயத்தனங்களாலும் மீட்டெடுக்க முடியாத கையறு நிலையிலுள்ள அந்த இளைஞனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், உயிரிழந்த இளைஞனின் வாக்குமூலக் காணொலி, சட்ட மருத்துவ நிபுணரின் உடற்கூற்றாய்வு அறிக்கை என்பவற்றை சான்றாதாரங்களாகக் கொண்டு இக்கொலையோடு தொடர்புடைய குற்றவாளிகளை எந்தச் சமரசங்களுமற்றுத் தண்டிப்பதற்கும், இனியொருபோதும் இத்தகைய அசம்பாவிதங்கள் மீளநிகழாமையை உறுதி செய்வதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

# முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் வடக்கு மாகாண சபைக்கு மாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.22

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடந்த 4 ஆண்டுகளாகப் பணியாற்றும் கனகேஸ்வரன் நாளை முதல் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.



கனகேஸ்வரன் நிர்வாக சேவை தரம் ஒன்றில் இருந்து அதிவிசேட தரத்திற்கு தேர்வான நிலையிலேயே இந்த மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் நாளை முதல் கடமையை பொறுப்பேற்கும் நிலையில் மாகாண அமைச்சு ஒன்றின் செயலாளர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.11.2023




இன்று அதிக பயணங்கள் காணப்படும். எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

இன்று கடின உழைப்பின் மூலம் நீங்கள் வெற்றி காணலாம். கவனக் குறைவு காரணமாக பணிகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

உறவில் இன்று புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இன்று மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் ஏற்படும். குடும்பத் தேவைக் காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

மூட்டுக்களில் விறைப்பு அல்லது வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பயனுள்ள உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத் திக் கொள்ள இயலும். எதிர்பாராத வகை யில் கிடைக்கும் சொத்து உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும்.

கடின உழைப்பு வெற்றி பெற்றுத் தரும். உங்கள் முயற்சிக்கான பாராட்டு பெறுவீர்கள்.

நீங்கள் குடும்ப வட்டாரத்தில் மகிழ்ச்சியுடனும் அன்புடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த திருப்தி கிடைக்கும்.

காப்பீடு மற்றும் பூர்வீகச் சொத்து வகையில் பண வரவிற்கு வாய்ப்புள்ளது. எனவே நிதி விஷயங்களை கவனமாக கட்டுப்பாட்டுடன் பராமரிப்பது நல்லது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் சுறுசுறுப்பாக செயல்களில் ஈடுபட்டிருப்பீர்கள். உங்க-ளின் இனிமையான தகவல் தொடர்பின் மூலம் பலவற்றை சாதிப்பீர்கள்.

இன்று உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பணியின் இயல்பை விரிவுபடுத்தலாம்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். குடும்ப உறுபினர்களுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக் கும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக் காது.




புனித மற்றும் ஆன்மீக யாத்தி ரைக்கு இது உகந்த நாள். ஏழைக ளுக்கு உணவு அளித்தல் மற்றும் தொண்டு நடவடிக்கைகள் மூலம் நன்மை பெறலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப் படுகின்றது. பணி சம்பந்தமான முக்கிய செயல்களில் தாமதங்களை எதிர்கொள்ள நேரும்.

குடும்ப பெரியோர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை பராமரிக்க அமைதியை மேற்கொள்வது நல்லது.

பண வரவை விட செலவு அதிகமாக இருக்கும். நீங்கள் பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். தோள் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடு வது நன்மை அளிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகளில் சிறந்த பலன் களை காண இயலாது. உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அகந்தை ப் போக்கின் காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பதட்டம் காரணமாக சில அசௌகரியங்களை உணர் வீர்கள். உடல் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு வெற்றி கிடைக்கும் நாள். புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள். இது உங்களுக்கு சிறந்த நாள்.

நீங்கள் உங்கள் பணிகளில் சிறப் பாக செயலாற்ற இயலும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி காணப்படும்.

நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். ஆன்மீக விஷயங்களுக்கு செலவு செய்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அதிக பணிகள் காணப்படும். உங்கள் நேரம் மற்றும் ஆற்றலை நன்கு பயன்படுத்த திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணி களை சிறப்பாக ஆற்ற நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.

குடும்ப வளர்ச்சி திருப்திகரமாக இருக்காது. குடும்ப உறுப்பினர்களிடையேகருத்து வேறுபாடு காணப் படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய நீங்கள் கடன் வாங்கு வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பலன்கள் இன்று உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் அதிக முயற்சி எடுக்க வேண்டும். சுப காரி யங்கள் தள்ளிப் போகும்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் குறைவு. உங்கள் பணிகளை மேற் கொள்வதில் தாமதம் காணப்படும்.

உங்கள் வார்த்தைகள் மற்றவரை காயப்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களிடையே மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. தேவை யற்ற செலவுகள் கவலையை ஏற்படுத்தும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.11.2023




இன்றைய நாளை இசை கேட்பது, தொண்டு செய்வது, தன தருமங்கள் செய்வது போன்ற ஆன்மீக காரியங் களுக்கு பயன்படுத்துங்கள். இதனால் உங்களுக்கு மன ஆறுதல் மற்றும் மகிழ்ச்சி கிடைக்கும்.

பணியில் திருப்தி நிலை குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். தொழில் செய்பவர்கள் தங்கள் செயல்களில் தாமதங்களை உணர்வார்கள்.

உங்கள் தாயுடன் புரிந்துணர்வு கொள்வதில் சில பிரச்சினை காணப்படும்.. இதனை தீர்த்து நல்லுறவை ஏற்படுத்துங்கள்.

இன்று சிறப்பான நிதிநிலைக்கு ஏற்ற நாள் அல்ல. இன்று பண வரவு செலவு இரண்டும் காணப்பட்டாலும் செலவு அதிகமாக இருக்கும்.




இன்று எதிர்பாராத நன்மைகள் நடக்கும். நீங்கள் பயணம் ஒன்றை மேற்கொள்ளலாம்.

பணி சம்பந்தமான பயணம் காணப் படுகின்றது. தொழில் செய்பவர்கள் மிதமான பலன்களை காண்பார்கள்.

கருத்து வேறுபாடு ஒன்றின் காரணமாக உங்கள் நெருங்கிய உறவுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று மிதமான பண வரவு காணப்படும். சேமிப்ப தற்கான வாய்ப்பும் இன்று குறைவு.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள் வலி மற்றும் சளி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் தகவல் தொடர்பு திறமை மூலம் சிறந்த பலன்களைக் காண லாம். உங்கள் திறமைகளை மேம்படுத்த இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்

நீங்கள் உங்கள் பணிகளை நேர்மையாக மேற்கொள்வீர்கள். சக பணியாளர் களுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் வார்த்தைகளை கவனமாக தேர்ந்தெடுத்து பேச வேண்டும்.

உங்கள் வீட்டு பெரியவர்களுடன் மோதல்கள் ஏற்பட வாய்புள்ளது. உறவில் மகிழ்ச்சி யை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்வது சிறந்தது.

இன்று அதிக பணம் செலவு செய்ய நேரலாம். நிதியில் ஸ்திரத்தன்மை காண சேமிக்க வேண்டியது அவசியம்.

கண் எரிச்சல் மற்றும் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் சில விஷயங்களை விட்டுக்கொடுக்க நேரலாம். இதனால் உங்களின் பணிகளை எளிதாக முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனம் தேவை. பணியில் சிறப்பாக செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் குழந்தை முன்னேற்றம் குறித்த கவலை காணப்படும். குடும்ப உறுப் பினர்களுடன் அதிக நேரம் செலவு செய்வதனால் அவர்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சி அடைவார்கள்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண வரவு குறிந்து காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# வடமராட்சியில் நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி



மாவீரர் வாரத்தின் தொடக்க நாள் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு வடமராட்சி பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

மாலிசந்தி தோட்டப் பகுதியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மூன்று மாவீரர்களின் தாயார் பொதுச்சுடர் ஏற்றியமையைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் மாவீரர்களது பெற்றோர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் பொதுமக்க கலந்து கொண்டனர்.












# முல்லை கொக்குத்தொடுவாயிலும் நேற்று மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு

முல்லைத்தீவு , கொக்குத்தொடுவாய், கொக்குளாய், கருநாட்டுக்கேணி பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் கொக்குதொடுவாய் சமூக அமைப்புக்கள், கொக்குத்தொடுவாய் மக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு முதல் நிகழ்வாக உயிர்த் தியாகம் செய்த இரண்டு மாவீரர்களின் பெற்றோரான கணபதிப்பிள்ளை பாலசிவராசாவினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் மாவீரர்கள் இந்த மண்ணிற்கு ஆற்றிய உயிர்த் தியாகம் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# பேனாப் போராளி கானமயில்நாதன்: கொலை வாளின் கீழ் ஊடகப் பணியாற்றிய ஈழ விடுதலைப் போரின் சத்தமற்ற பத்திரிகையாளர் !



- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

**(போர்க்கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகைக் கம்பீர மாகத் துணிச்சலுடன் வழி நடத் தியவர் ம.வ.கானமயில்நாதன். பேனாப் போராளியான மறைந்த கானமயில்நாதன், தமிழ் மக்களின் குரலாக என்றும் ஒலித்தவர். யாழில் துணிச்சல் மிக்க பத்திரிகையாள ரான ம.வ.கானமயில்நாதனின் (22.11.2023) ஈராண்டு நினைவாக இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**



தனது வாழ்நாள் முழுவதையும் பத்திரிகைக்காக அர்பணித்தது மாத் திரமன்றி ஈழத்துப் பத்திரிகை ஜாம்ப வான்கள் என்று குறிப்பிடத்தக்க தினகரன் பத்திரிகை ஆசிரியர் சிவ குருநாதன், தினபதி பத்திரிகை ஆசிரி யர் சிவநாயகம், வீரகேசரியின் ஆசி ரியர் எஸ்.கோபாலரட்ணம், ஆகியோ ரின் வரிசையில் வடக்கில் தன்னையும் தடம் பதித்தவரே கானமயில்நாதன் !

### துணிச்சலுடன் வழி நடத்திய பத்திரிகையாளன்

போர்க் கால நெருக்கடியிலும் தமிழ்ப் பத்திரிகை உலகை கம்பீர மாகத் துணிச்சலுடன் வழி நடாத்திய வர் ம.வ.கானமயில்நாதன்.

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்லி, தமிழிற்கும், தமிழர்களுக்கும் பத்திரி கைத் துறையில் இவர் செய்த சேவை அளப் பெரியது.

ஈழத்துப் பத்திரிகை உலகைத் துணிச்சலுடன் தூக்கி நிறுத்தியவர் கானமயில்நாதன். ஈழ ஊடகத் துறை யின் அடையாளமாகவும், மூத்த ஆளுமையாகவும்விளங்கியமூத்தஊடக வியலாளரும், உதயன் பத்திரிகை யின் பிரதம ஆசிரியருமான ம.வ.கான மயில்நாதன் 22.11.2021 அன்று நல்லூரில் தனது 79 ஆவது வயதில் காலமானார்.

எதையும் சாதிக்க முடியும் என்று ஊடகத்துறைக்குவரும் இளையோர் களுக்கு வழிகாட்டியாக, தமிழ் ஊடக வரலாற்றின் ஒரு பெரு ஆலமரமாக கானமயில்நாதன் பெருவிருட்சமாக விளங்கினார்.

### என்றும் ஊடக இளைஞனே !

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ம.வ.கானமயில்நாதன் 1942 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி பிறந் தார். ஊடகவியலாளருக்கு இருக்க வேண்டிய இள இரத்தம் அவரது உடலில் என்றும் ஓடிக் கொண்டிருந்தது. அவர் ஓய்வுபெற்ற நிலையிலும் ஊடகப் பணியைத் தொடர்ந்த இளைஞன் என்றால் மிகையல்ல.

1962ஆம் ஆண்டு ஊடகத்துறை யில் காலடி எடுத்து வைத்தது முதல் 56 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத் துறையில் தடம்பதித்தார். 1962ஆம் ஆண்டு ஈழநாடு பத்திரிகையில் உதவி ஆசிரியராகத் தொடங்கியது இவரது ஊடகத் துறை வாழ்வு. அதன் பின்னர் 1965 ஆம் ஆண்டு தினபதி பத்திரி கையில் உதவி ஆசிரியராக இணைந்து பின்னர் பிரதம உதவி ஆசிரியராக உயர்ந்தார். 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் நடக்கும்வரை கொழும்பில் தினபதியில் பணியாற்றினார்.

1983ஆம் ஆண்டு இனக்கல வரத்தைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் திரும்பிய இவர், பின்னர் வீரகேசரியில் பணியாற்றினார். அதன்பின், நவம்பர் 1985ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது. பிரதம ஆசிரி யராகப் பெறுபேற்று நீண்ட காலமாக பிரதம ஆசிரியராகப் பணியாற்றி னார்.

### உதயன் பிரதம ஆசிரியர்

தனது ஊடகப் பயணத்தை வீர கேசரி ஆசிரியர் பீடத்தில் ஆரம்பித்து, தினபதி பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய போது தினபதி பத் திரிகை இடைநிறுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை ஒன்றை நடத்த வேண்டிய தேவை எழுந்தபோது 1985 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை உருவாக்கப்பட்டு அன்றிலிருந்து தொடர்ச்சியாகப் பத்திரிகைத் துறை யில் பிரதம ஆசிரியராக தனது ஊடகப் பணியில் அசைக்க முடியாத முத்தி ரையைப் பதித்தார்.

உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக அவர் பணியாற்றிய போது எதிர்கொண்ட ஆபத்துக்கள், சவால்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் அவற்றுக்கு எல்லாம் அஞ்சாது, தொடர்ந்தும் ஊடகப் பணியை முன் னெடுத்தார்.

### 36 வருடங்கள் பிரதம ஆசிரியராக

பலதரப்பட்ட அரசியல் அனுபவ அறி வுடைய அவர், தமிழ் மக்களின் குரலாக மக்களுக்காகப் பேசும் நல்ல மனம் படைத்தவர். ஆகவே அவர் யாழ். குடா நாட்டின் மிக மூத்த யாவரும் பெரு மைப்படக் கூடிய ஒரு ஊடகவியலாள ராக மிளிர்ந்தார்.

உதயன் பத்திரிகை 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது முதல் தனது வாழ்வின் இறுதிக்காலம் வரையி லான 36 வருடங்கள் பிரதம ஆசிரிய ராக கடமையாற்றியுள்ளமை ஒரு வரலாற் றுப் பதிவே. இறுதியாக காலைக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்திலும் பங்களித்தார். சிறந்த வழிகாட்டியாகவும் பண்பாளனாகவும் தன்னை நிலை நிறுத்திய பத்திரிகை ஆசான் இவர்.

### சத்தமற்ற ஊடகவியலாளராக

ஈழ விடுதலைப் போராட்டத்தின் சத்த மற்ற ஊடகவியலாளராக இருந்து, மறைந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ. கானமயில்நாதன், தமிழ் மக்கள் மீதான அரச அடக்கு முறையை வெளியுல கத்துக்கு வெளிப்படுத்தியவர்.

உதயன் பத்திரிகை மீது, பேரினவாத அரசுகள் கொடுஞ்சினம் கொண்டிருந்தன. உதயனின் குரலை நசுக்கி விடவேண்டும் என்று அந்த அரசுகள் கங்கணம் கட்டிச் செயற்பட்ட காலம். உதயன் பத்திரிகை மீது எண்ணிலடங்காத தாக்குத்தல்கள், உயிர் பறிப்புக்கள் நிகழ்ந்தன.

தொடர்ச்சி ▼



# பேனாப் போராளி...

தொடர்ச்சி ▲

ம.வ.கானமயில்நாதன் மீது யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் வைத்து, ஆயுதக் குழு ஒன்று வாகனத்தால் திட்டமிட்டு விபத்து ஏற்படுத்தியது. அதில் அவர் காயங்களுடன் தப்பிய போதும், அன்று முதல் கோல் ஊன்றி நடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஆயினும் வடக்கில் இருந்து வெளியான தமிழ் மக்களின் குரலை கொடுங்கோலர்களால் நசுக்க முடியவில்லை. ஊடக பரப்பில் உரிமை கோரப்படாத மரணங்களும் காணாமல் ஆக்கப்படுதல்களும் அச்சுறுத்தல்களும் நிரம்பி வழிந்த மண்ணில் சோரம் போகாது தனது ஊடகப் பணியை உதயன் நாளிதழில் அதன் பிரதம ஆசிரியராக இருந்து ஆற்றியவர் ம.வ.கானமயில்நாதன்.

## கொலைவாளின் கீழாக ஊடகப் பணி

2005 இன் பிற் பகுதியில் துப்பாக்கிதாரர்களது கொலைக் கரங்களில் இருந்து தப்பிக்க அவர் வருடக் கணக்கில் தனது அலுவலகத்தில் முடங்கிக் கிடந்தே, நாள்தோறும் உதயன் நாளிதழை வெளிக்கொணர்ந்தார்.

ம.வ.கானமயில்நாதனை அச்சுறுத்தல்களால் அடிபணிய வைக்கலாமென்று பலரும் எதிர் பார்த்தபோதும் தனது ஒற்றை பேனாவின் முனையை நம்பி கொலைவாளின் கீழாக ஊடகப் பணியாற்றியவர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட பரப்பில் ஊடக பங்களிப்பு பற்றிய வரலாற்றுப் பதிவுகளில் என்றுமே விலக்கப்பட முடியாத சக்திகளுள் ஒருவராக அவர் இருந்து வந்திருந்தார்.

## தமிழ் மக்களின் குரலாக

மறைந்த கானமயில்நாதன் நெருக்கடியான காலகட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப் பணியாற்றிய மிக சொற்ப அளவிலான மூத்த ஊடகவியலாளர்களுள் அவரும் ஒருவர்.

ஊடகவியலாளர்கள் மக்களின் குரலாக இருக்க வேண்டும். செய்தியை உண்மைத் தன்மையுடன் சொல்ல வேண்டும். எதிலும் கேள்வி கேளுங்கள். எதற்காகவும் விட்டுக் கொடுப்புகளை செய்யாதீர்கள். ஊடகத்துறைக்கு வரும் இளையோர்கள் இதை மனதில் எப்போதும் வைத்திருங்கள். சாதிக்க முடியும் என்று வழிகாட்டிய தமிழ் ஊடகம் வரலாற்றின் ஒரு பெரு ஆலமரம் சரிந்து ஈராண்டுகள் உருண்டோடி விட்டன.

ம.வ.கானமயில்நாதனின் பாசறையில் வளர்ந்த பல ஊடகவியலாளர்கள் இன்றும் உலகின் பல திசைகளிலும் தேமதுரத் தமிழை வையகமெங்கும் காத்து வருகிறார்கள்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உதயன் பத்திரிகை குரல் கொடுத்ததால் கடும் நெருக்கடிகளை நீண்ட காலமாக எதிர்கொண்டது. தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில் நாதனின் பேனா உண்மைகளை வரிகளாக்கி வரலாற்றில் ஆவணமாக்கியுள்ளார்.

## பிரான்ஸின் தலைநகரில் விருது

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் தேதி எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பின் விருது வழங்கும் விழாவில், நெருக்கடியான கால கட்டத்தில் தாயகத்தில் இருந்து ஊடகப் பணியாற்றியதை கௌரவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் தமிழ் மக்களின் குரலாக, சத்திய நேர்மையுடன் கானமயில் நாதனின் ஊடகத்துறையில் தேசியம் சார்ந்த நெருக்கடியான சூழலில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியமைக்காக 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி யாழ். ஊடக அமையத்தால் அவர் வாழும் போதே கௌரவிக்கப்பட்டார்.

## இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு

ஈழத்துப் பத்திரிகை வரலாற்றிலேயே தொடர்ச்சியாக ஆசிரியராக இருந்து நெருக்கடியான போர்ச் சூழலிலும், ஊடக அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தனது இலக்கில் சிறிதும் தடம் மாறாது பயணித்துக் கொண்டிருந்த மூத்த ஊடகவியலாளர் ம.வ.கானமயில்நாதன் ஊடகப் பரப்பிலுள்ள இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம்.

'எமது மக்களுக்கான குரலாக நாங்கள் இருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் எமது செயற்பாடுகள் அன்றும் – இன்றும் அமைந்தன. அதற்காகப் பலவற்றை இழந்தபோதும், ஆயினும் முன்நோக்கியே சென்றோம்'. இது உதயன் பத்திரிகையின் முதன்மை ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் கூறிய வார்த்தைகளாகும்.

'நாம் கடந்து வந்த பாதையில் சுமந்த வலிகளின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். ஊடகமாக மக்களுக்கான தகவல்களைச் சரிவர வழங்கி, எம் மக்களின் உரிமைகளுக்காகப் பேசுகின்றோம். அதனில் மிகுந்த நிறைவும் இருக்கின்றது' இவ்வாறு 2015 ஆம் ஆண்டு வழங்கிய பேட்டி ஒன்றில் பூரிப்புடன் தெரிவித்திருந்தார்.

தன் வாழ்வின் பெரும் காலத்தை தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்த ஊடகப் பெருந்தகை ம.வ.கானமயில் நாதன் மக்களுக்கான குரலாக ஒலித்த அந்தப் பேனாப் போராளி இன்று இல்லை. தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பது என்ற கொள்கையின்படி, சமூகத்தின் காவலனாக தனது பணிகளைச் செய்ததில் முதன்மை ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆற்றிய பங்கு அளப் பெரியது.



# 72 வயதில் சாதித்துக் காட்டிய முல்லைத்தீவுப் பெண்மணி!









- ந.லோகதயாளன் -

பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற 22ஆவது ஆசிய தடகளப் போட்டிகளில் முல்லைத்தீவைச் சேர்ந்த 72 வயதுடைய பெண்மணி சாதனை வெற்றிகளைப் பெற்றுள்ளார்.

நவம்பர் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற National Masters & Seniors Athletics போட்டியிலேயே இலங்கையிலிருந்து கலந்துகொண்ட முல்லைத்தீவு முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி. செ.அகிலத்திருநாயகி 3 பதக்கங்களைப் பெற்று சாதணை புரிந்துள்ளார்.

இவர்,

5000 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம்

1500 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடம்

800 மீற்றர் ஓட்டத்தில் 3ஆம் இடம்

5000 மீற்றர் விரைவு நடையில் 4ஆம் இடம்

என பெற்று தாய் மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.


இவருடன் போட்டி போட்டவர்கள் அனைவருமே காலணி அணிந்து போட்டிகளில் கலந்து கொண்டனர். ஆனால், அகிலத்திருநாயகி காலணி அணியாமலே அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்றினார்.

வவுனியா சிறைச்சாலையில் சிறைக் காவலராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், இலங்கையில் இந்த ஆண்டு இடம்பெற்ற போட்டிகளில் மட்டும் 13 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

அதேவேளை, கடந்த காலங்களில் சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளில் இடம்பெற்ற போட்டிகளிலும் பங்குபற்றிச் சாதனை புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக கடற்றொழிலாளர்களை கைது செய்வது இலங்கை கடற்படைக்கு வேடிக்கையான செயல்!

## - துரை வைகோ கண்டனம்



தமிழ்நாட்டைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களை கைது செய்வது இலங்கை கடற்படையினருக்கு வேடிக்கையான செயலாகிவிட்டது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக முதன்மைச் செயலாளர் துரை வைகோ தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க, மத்திய அரசாங்கம், இலங்கையுடன் கடும் போக்கை கடைப்பிடித்து கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “சட்டவிரோத கடற்றொழில் குற்றச்சாட்டின் பேரில் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதால் பல இந்திய கடற்றொழிலாளர்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது.

எனவே இந்த விடயத்தில் கச்சதீவை மீட்பதே ஒரே தீர்வாக இருக்கும் எனில், புதிய கண்ணோட்டத்துடன் அதற்கான சாத்தியக்கூறுகளை மத்திய அரசு ஆராய வேண்டும்.

இந்தியா இலங்கைக்கு மிகவும் உதவியாக இருந்தது. குறிப்பாக அவர்கள் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நிலைக்கு, இந்தியா வழங்கிய உதவிக்கு, இலங்கை சமமான பதிலை வழங்கவேண்டும்.

அத்துடன், முதல்வர் தலைமையிலான தமிழக அரசாங்கம், கடந்த ஆண்டு நெருக்கடியால் பட்டினியால் வாடும் இலங்கையர்களுக்கு தானாக முன்வந்து பல கோடி ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்களை கடல் மற்றும் விமானம் மூலம் அனுப்பி வைத்தது.

எனவே, குறிப்பாக தமிழக கடற்றொழிலாளர்களுடன் இலங்கை அரசாங்கம் நட்பாக இருப்பது நியாயமாகவும் உண்மையாகவும் இருக்கும்” என்றும் துரை வைகோ குறிப்பிட்டுள்ளார்.

# பாலஸ்தீன அகதிகளுக்காக இந்தியாவால் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி




பாலஸ்தீன அகதிகளுக்கு உதவும் வகையில், ஐக்கிய நாடுகள் சபையிடம் 2.5 மில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா வழங்கியுள்ளது.

பதிவு செய்யப்பட்ட பாலஸ்தீன அகதிகளுக்கு நேரடி நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டங்களை ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்துள்ளது.

பாலஸ்தீன அகதிகளுக்கு கல்வி, சுகாதாரம், நிவாரணம் மற்றும் சமூக சேவைகள் உள்ளிட்ட முக்கிய திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு பல்வேறு நாடுகளும் நிறுவனங்களும் உதவிகளை வழங்கி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக நேற்று 2.5 மில்லியன் அமெரிக்க டொலரை இந்தியா வழங்கியுள்ளது.

காஸாவில் மனிதாபிமான தேவைகள் அதிகரித்து வரும் நிலை மையில், இவ்வாறான உதவிகள் அத்தியாவசியமானவை என ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

# சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் பாதுகாப்பாக உள்ளனர் என்பது உறுதியானது



இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் காணொலி 9 நாட்களுக்கு பின்னர் முதன்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சுரங்கத்திற்குள் செலுத்தப்பட்ட குழாய் ஒன்றின் ஊடாக கமரா ஒன்று அனுப்பப்பட்டு, தொழிலாளர்களின் தற்போதைய நிலைமை தொடர்பில், காணொளி பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கடந்த 12 ஆம் திகதி சுரங்கத்திற்குள் கடமையாற்றியிருந்த சந்தர்ப்பத்தில் திடீரென மண்சரிவு ஏற்பட்டிருந்தது.

இதன்போது, அதில் பணியாற்றிய 42 தொழிலாளர்கள் அதற்குள் சிக்குண்டனர்.

இந்தநிலையில், அவர்கள் இந்த சுரங்கத்திற்குள் பாதுகாப்பாக உள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுக்கான உணவு மற்றும் பிராணவாயு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காஸாவில் 22 லட்சம் பேருக்கு உணவு தேவை: ஐ.நா. தெரிவிப்பு



காஸாவில் 22 லட்சம் பேருக்கு உணவு தேவைப்படுவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பாலஸ்தீனத்தின் காஸாவில் இருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது எதிர்பாராத திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதில் இஸ்ரேலை சேர்ந்த சுமார் 1,200 பேர் உயிரிழந்தனர். மேலும், இஸ்ரேலில் இருந்து சுமார் 200 இற்கும் மேற்பட்டவர்களை பணயக்கைதிகளாக ஹமாஸ் படையினர் பிடித்துச்சென்றனர்.

இதைத் தொடர்ந்து, காஸா மீது இஸ்ரேல் கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது.

காஸாவில் உள்ள மருத்துவமனைகளை இலக்கு வைத்து இஸ்ரேல் இராணுவம் தற்போது தாக்குதல் மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே தற்காலிக போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளும் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், காஸா நிலவரம் குறித்து தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்து வருகிறது. இந்த நிலையில், ஐ.நா. உணவு அமைப்பு, காஸாவில் தற்போது 22 லட்சம் பேருக்கு உணவு தேவைப்படுவதாக தெரிவித்துள்ளது.

மேலும், அங்கு மக்கள் உணவு, எரிபொருள் இன்றி தவிக்கின்றனர் எனவும் அவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறியுள்ளது.

தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால், மருத்துவமனைகள் செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தீவிர சிகிச்சை பெற்று வந்த குழந்தைகள் எகிப்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மருத்துவமனையை ஹமாஸ் அமைப்பினர் தங்களது செயற்பாட்டிற்காக பயன்படுத்தி வந்ததாக குற்றம்சாட்டி வரும் இஸ்ரேல் இராணுவம், மருத்துவமனைகளில் சோதனை நடத்தி வருகிறது. இரண்டு மூன்று சுரங்கங்கள் மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ளதை கண்டுபிடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இரண்டு பத்திரிகையாளர்கள் உயிரிழப்பு



லெபனானின் தெற்கு பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் இரண்டு பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் இருவரும் அந்த நாட்டின் தலைநகர் பெய்ரூட்டில் இயங்கி வரும் அல்-மயாதீன் எனும் அரபு மொழி தொலைக்காட்சிக்காக பணியாற்றி வந்துள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது அவர்கள் லெபனான் - இஸ்ரேல் எல்லை நிலவரம் தொடர்பாக செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தகவல் அந்த நாட்டின் தகவல் துறை அமைச்சர் ஜியாத் மக்காரி உறுதி செய்துள்ளார். இந்த தாக்குதலில் லெபனானை சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார். அந்த நாட்டில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்புடன் இணைந்து அல்-மயாதீன் தொலைக்காட்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

கடந்த வாரம் இஸ்ரேலில் அல்-மயாதீன் தொலைக்காட்சி ஒளிபரப்பு தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், பத்திரிக்கையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதல் குறிவைத்து மேற்கொள்ளப்பட்டது என லெபனான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆராய்வதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று இஸ்ரேல் - லெபனான் எல்லையை ஒட்டிய தெற்கு லெபனான் பகுதி கிராமங்களில் வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 80 வயது மூதாட்டி உயிரிழந்துள்ளார். அவரது பேரக்குழந்தையும் காயமடைந்துள்ளனர். அவரால் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒக்டோபர் 14 ஆம் திகதி இதே தெற்கு லெபனான் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ரொய்டர்ஸ் பத்திரிகையாளர் உயிரிழந்தார். இந்த தாக்குதலில் சர்வதேச பத்திரிகை நிறுவனங்களை சேர்ந்த 2 பத்திரிகையாளர் காயமடைந்தனர். கடந்த 8 ஆம் திகதி முதல் இஸ்ரேல் இராணுவம் பாலஸ்தீனம் மற்றும் லெபனான் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.